செய்தி வெளியீடு எண்:300 நாள்: 19.06.2021

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (19.06.2021) காலை, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு தனது பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தார். மேலும், தனது சமூக ஊடகப் பக்கங்களிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திரு. ராகுல் காந்தி அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்துப் பதிவிட்டார். அதன் விவரம் வருமாறு:

Wishing my beloved brother @RahulGandhi on his birthday and I join others in praising his selfless, untiring work to establish an egalitarian India in every aspect. His commitment to the ethos of the Congress Party has been exemplary.

தமிழாக்கம்:

எனது ஆருயிர் இளவல் ராகுல் காந்தி அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்து, எல்லா வகையிலும் சமத்துவமான இந்தியாவை நிறுவுவதற்காக அவர் ஆற்றிவரும் தன்னலங்கருதா - ஓய்விலாப் பணியைப் பாராட்டும் அனைவரோடும் இணைகிறேன். காங்கிரஸ் கட்சியின் அடிப்படைப் பண்புகளின்மேல் அவருக்குள்ள ஈடுபாடு மற்றவர்க்கு எடுத்துக்காட்டாக அமையத்தக்கதாகும்.

••••••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9